**த. நா.ச.பே. எண் : 019** **நாள் : 01.06.2018**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – **1.6.2018**

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகப் பெரிய வனப்பகுதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். வன வளத்தை மேம்படுத்துவதிலும், காப்பதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே வனத் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டின் இலையுதிர் காடுகள் வறட்சியான காலங்களில் காட்டுத் தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடியவை. பெரும்பாலான காட்டுத் தீ நிகழ்வுகள் மனித தவறுகளால் நிகழ்பவை. காட்டுத் தீயினை கட்டுப்படுத்த வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய காட்டுப் பகுதிகள் பரவலாக உள்ளதால், களத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காட்டுத் தீயினை கட்டுப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக அத்தீயில் சிக்கிக் கொள்ளும் மக்களை மீட்க சிறப்பு பயிற்சி மற்றும் அடிப்படை உபகரணங்கள் வழங்கவும் 2 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. தற்போது வனத்துறை தலைமை அலுவலகம் பனகல் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள இடப்பற்றாக் குறையை கருத்தில்

கொண்டு, வேளச்சேரியில் அமைந்துள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் வனத்துறை தலைமை அலுவலகக் கட்டடம் 70,000 சதுர அடி பரப்பளவு கொண்ட இரு தொகுதி கட்டடங்களாக 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. வனச் சரகங்களுக்கு வழங்கிட 125 புதிய ஜீப்புகள், 12 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் சூழல் நட்பு வாழ்க்கையை அடையாளம் கண்டு, அவர்களின் கலாச்சார வளமையை மேம்படுத்தவும், இயற்கை நட்பு வாழ்க்கை முறையைத் தெரியப்படுத்தவும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லைப் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இது தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில் ஏற்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**